செ.வெ. எண்: 443 நாள்: 12.09.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தீபாவளி பண்டிகை விடுமுறையை முன்னிட்டு சொந்த ஊருக்கு செல்லவிருக்கும் பயணிகளின் நன்மைக்காக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்கப்பட வேண்டிய சிறப்பு பேருந்துகள் மற்றும் செயல்படுத்தப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனை கூட்டம் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எம். ஆர். விஜயபாஸ்கர் அவர்களின் தலைமையில், இன்று (12.09.2016) நடைபெற்றது. இக்கூட்டத்தில் தீபாவளி பண்டிகையின் போது சென்னையிலிருந்து மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அரசு போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பொது மக்களுக்கு தேவையான அளவு பேருந்துகளை சிரமமின்றி இயக்குவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டது, மற்றும் முன்பதிவிற்கு தேவையான கூடுதல் பேருந்துகள் இயக்குவது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில், அரசு முதன்மை செயலாளர், போக்குவரத்து துறை, திரு சந்திரகாந்த் காம்ளே, இஆப, தலைமைச் செயல் அலுவலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், திரு எம்.மதிவாணன், இஆப, மற்றும் காவல் துறை இணை ஆணையர் (போக்குவரத்து) திரு எம்.டி. கணேசமூர்த்தி, இகாப, துணை ஆணையர் (போக்குவரத்து) திரு சிவானந்தம், மற்றும் அனைத்து போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள், மற்றும் பெருநகர வளர்ச்சி குழும அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

**மேலாண் இயக்குநர்**
**அரசு விரைவுப் போக்குவரத்துக்கழகம் த.நா.லிட்**

**வெளியீடு: – இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.